

# இரண்டு வார்த்தை

அபிராமி அந்தாதி என்னும் பக்திப் பாமாலை ஏதோ சிலர் மட்டுமே படிக்கக்கூடியது என்று பலர் நினைக்கிறார்கள். தாயின் சொத்து பிள்ளைகள் யாவருக்கும் சொந்தமானது. இதில் பேதம் ஏதுமில்லை. அபிராமி பட்டரால் இயற்றப்பெற்ற அபிராமி அந்தாதி அன்னையின் திருவருளால் அவரிடமிருந்து வெளிப்பட்டது. இதில் வேத ரகசியங்களெல்லாம் மறை பொருளாக, பொக்கிஷங்களாகப் புதைந்திருக்கின்றன. விலை மதிக்க முடியாத இந்தப் பொக்கிஷங்கள் நம் அனைவருக்கும் பொது உரிமையுடையதாக உள்ளன. இதற்கும், நமக்கும் சம்பந்தமில்லை என்பது போல் நாம் ஒதுங்கிச் செல்லுதல் கூடாது. 'அகில லோகங்களுக்கும் அரசியாக விளங்கும் தேவியின் குழந்தைகளாக நாம் இருக்கிறோம். இந்த குழந்தைகள் எவ்வளவு





நெருக்கடியான சூழல்களில் தற்போது இருந்தபோதிலும் அவற்றிலிருந்து அவர்கள் விடுபட்டு ஆனந்தப் பெருவாழ்வை அடைய வேண்டும் என்பதே அன்னையின் விருப்பமாகும். மாயைக்கு மூல காரணமாக இருக்கும் அவளே அம்மாயைகளிலிருந்து விடுபடுவதற்கும் பல வழிகளைச் செய்திருக்கிறாள். அந்த வழிகளை நாம் அடையாளம் காண வேண்டும். அடையாளம் காண்பதோடு நின்று விடாமல் அதனை செயல்முறைக்குக் கொண்டு வரவும் வேண்டும். எல்லாம் அன்னையின் விளையாட்டே.... அந்த விளையாட்டில் நாம் வெற்றி வாகை சூட வேண்டும் என்று அவள் விரும்புகிறாள். சோழ மண்டலத்தில் அமைந்த திருக்கடவூர் என்னும் புண்ணிய பூமியிலே அந்தணர் மரபில் அவதரித்தவர் அபிராமி பட்டர். அன்னை அபிராமியிடம் அளவு கடந்த அன்பினை அவர் கொண்டிருந்தார். சதாசர்வ காலமும் அன்னையின் நினைவாகவே அவர் இருந்தார். அக்கால கட்டத்தில் தஞ்சையை ஆண்டு வந்த சரபோஜி மன்னன் தை அமாவாசையன்று அன்னை அபிராமியை தரிசிக்க திருக்கடவூர் வந்தான். அப்போது அபிராமி பட்டர் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தார். அதனை சரியாக புரிந்து கொள்ளாத அம்மன்னன் இன்று என்ன திதி? என்று அவரிடம் கேட்டான்.

இன்று பௌர்ணமி என்று அபிராமி பட்டர் பதில் தந்தார். அமாவாசையை பௌர்ணமி என்று இவர் கூறுகிறாரே... என்று குழப்பமடைந்த அவன் தன் முகாமுக்குச் சென்றான். சிறிது நேரத்தில் தியான நிலையிலிருந்து தன் நிலைக்குத் திரும்பிய அபிராமி பட்டர்

மன்னனுக்கு தாம் தவறான பதில் தந்தது குறித்து வருந்தினார். தம் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்த பக்தனான அன்பரின் வருத்தத்தை மாற்ற விரும்பிய அபிராமி தன் தாடங்கம் (தோடு) ஒன்றினை வானில் வீசி எறிந்தாள். அது பூர்ண சந்திரனாக பதினான்கு லோகங்களிலும் பிரகாசித்தது. இதனைக் கண்ட மன்னன் அதிர்ந்தான். அன்னையின் அடியாரை சோதித்து விட்டோமே என்று வருந்தி அவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டான்.

தன் பக்தனுக்காக அமாவாசையைப் பௌர்ணமியாக மாற்றிய அபிராமி நம் வாழ்க்கையின் எல்லா விதிகளையும், தீவினைகளையும் மாற்றக்கூடிய ஆற்றல் பெற்றவளாகத் திகழ்கிறாள். ஆகவே அவளுடைய அருட் கருணையினால் தூண்டப்பெற்று அபிராமி பட்டரால் இயற்றப்பெற்ற அபிராமி அந்தாதியை அனைவரும் படித்து அன்னையின் பேருளைப் பெற வேண்டும். இந்த எண்ணத்தில் உதயமாகியிருப்பதே **''அபிராமி அற்புதமே... அருள் பொழியும் பொற்பதமே''** என்னும் இந்நூலாகும். அந்தாதியில் உள்ள அனைத்துப் பாடல்களும் இதில் இல்லாவிடினும் நறுக்குத் தெறித்தாற்போல் பொறுக்கு மணிகளாகச் சில முக்கியமான அற்புதப் பாடல்களும் பொருளும் இச்சிறு நூலை அலங்கரிக்கின்றன. மற்றும் அபிராமியின் பேரருளைப் பெற பாராயணம் செய்வதற்காக அபிராமி அந்தாதியின் நூறு பாடல்களையும், அபிராமியம்மை பதிகத்தையும் பக்தர்களுக்காக வழங்கியுள்ளோம். தாம் கற்ற கல்வியைப் பிறர் புரிந்து கொள்ளும் வகையில் சொல்ல முடியாதவர், நன்கு மலர்ந்திருந்தும், மணம் இல்லா மலருக்குச் சமமானவர் என்று தெய்வப் புலவர் வள்ளுவப் பெருந்தகை



குறிப்பிடுகிறார். அந்த வகையில் அபிராமி அந்தாதி என்னும் இந்த அரிய பொக்கிஷத்திலுள்ள கருத்துக் கருவூலங்களை அனைத்து தரப்பினரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் தக்க சான்றுகளுடன் எழுத வேண்டும் என்கிற அவா என்னுள் எழுந்தது. இந்த எண்ணத்தை ஏற்படுத்தியவள் அன்னை அபிராமியே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் உருவாக உறுதுணையாக இருந்த அனைவருக்கும் மற்றும் ஏராளமான தகவல்களுடன் உருவாகியுள்ள இந்நூலை நம்முடைய நூல்களை வழக்கமாக வெளியிட்டு வரும் மதி நிலையம் பதிப்பகத்தார் அவர்கள் நல்ல முறையில் சிறப்பாகப் பதிப்பித்து வெளியிட்டிருப்பது குருவருளே.

இந்நூலை படிக்கும் அன்பர்கள் அனைவருக்கும்

**நீங்காத செல்வம் நிறைந்து வாழ**

**ஸ்ரீமத்புவனேஸ்வரிஸ்வாமிகளின்**

**திருவடிகளைச் சிந்திக்கிறேன்.**

**ஸ்வாமிகளின் திருவடிகளில்**

**- பரத்வாஜ் ஸ்வாமிகள்**

